ஓய்வூதியச் சுற்றறிக்கை இல : 09/2015 (திருத்தம் II)

எனது இல : ஓதி/ சுற்றறிக்கை/ 2017

ஓய்வூதியத் திணைக்களம்,

மாளிகாவத்தை,

கொழும்பு 10.

2017.11.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்/ முப்படைத் தளபதிகள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள் மற்றும்
உள்ளூராட்சி அமைப்புக்களின் தலைவர்கள்.

**மரணப் பணிக்கொடை, மீளாய்வு செய்யப்பட்ட மரணப் பணிக்கொடை மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவுகள்.**

**(இயங்கலையினூடாக (online) மீளாய்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புதல்)**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2015.09.14 ஆம் திகதிய 09/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 2016.02.08 ஆம் திகதிய 09/2015 (திருத்தம் II) ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றின் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

02. ஓய்வூதிய திருத்த செயல்முறைகளை இயங்கலையில் தொடர்வதற்கான தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஓய்வூதிய திணைக்கள வலைத்தளம் www.pensions.gov.lk. இல் விசேட இணைப்பாக காணப்படும் PMS (Pension Management System) இனூடாக இந்தச் சேவைகளுக்கான இணைப்பைப் (link) பெற்றுக்கொள்ள முடியும்.

03. ஆரம்பத்தில் இச் சேவையைப் பெறும் போது தொடர்புடைய நிறுவனம் மற்றும் அலுவலர்கள் தம்மைப் பதிவு செய்வதனூடாக கிடைக்கப் பெறும் கடவுச் சொல்லைப் (password) பயன் படுத்தியே இச் சேவையை அணுக முடியும். அத்துடன் தற்போது பதியப்பட்டுள்ள நிறுவனங்கள் மீண்டும் பதிவு செய்யவேண்டிய அவசியமில்லை.

**04. வழங்கப்பட்ட சேவைகள்**

1. ஓர் அரச அலுவலரின் ஓய்வூதியம், மீளாய்வு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான ஓய்வூதிய விண்ணப்பத்தை (PD6) இயங்கலையினூடாக அனுப்ப முடியும்.
2. மீளாய்வு செய்யப்பட்ட கொடைப் பத்திரத்தை அச்சிடும் வசதி வழங்கப்பட்டுள்ளது. (திறைசேரி 79). (நிறுவனத்தின் தலைவரால் கையொப்பம் இட்டபட்ட பின்னரே இது உறுதிப்படுத்தப்படும்).

3. செலவிடும் நேரம் குறைக்கப்படுவதுடன் விரைவாகவும் ஓய்வூதிய திருத்தங்களையும் ஓய்வூதிய மீளாய்வுகளையும் செய்யக்கூடிய ஆற்றல்.
4. விண்ணப்ப படிவத்துடன் தொடர்புடைய தகவலை எந்த சந்தர்ப்பத்திலும் பார்க்கக்கூடிய ஆற்றல்.

05. மேற்படி சேவைகளை அணுகுவதற்கான முழுமையான அறிவுறுத்தல் கையேடு இந்தச் சுற்றறிக்கையுடன் இணைப்பு 01ஆக தரப்பட்டுள்ளது. மெலும் www.sathkara.pensions.gov.lk/guidlines. எனும் வலைத்தள இணைப்பில் உள்ள காண்ணொளிகளைப் பயன்படுத்தி இதற்கான வழியைக் கண்டறிய தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

06. இச்சேவை 2017.11.10 அம் திகதயிலிருந்து ஆரம்பிக்கப்படுவதுடன் முந்தைய படிமுறைப்படி அனுப்பப்படும் அச்சுப் பிரதியாகவுள்ள ஓய்வூதிய மீளாய்வு விண்ணப்பங்கள் (PD 06) அதன் பிற்பாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

07. அரச சேவையின் தரம் மற்றும் செயல்திறனை விரைவுபடுத்துவதற்காக, மேம்படுத்திய தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டும் நடவடிக்கைகள் வெற்றி பெற தங்களது ஒத்துழைப்பு மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

08. பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் ஒப்புதலுடன் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்
ஏ. ஜகத் டி டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. ஜனாதிபதி செயலாளர் – த.த.த
2. பிரதமரின் செயலாளர் – த.த.த
3. அமைச்சரவைச் செயலாளர் – த.த.த
4. பொது நிர்வாக முகாமைத்திவ அமைச்சின் செயலாளர் – த.த.த
5. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த